[1969 மார்ச் 26

பூச்சி கொல்லி மருந்துகளுக்கு உதவித் தொகை

***474**—வினா திரு. கே. போஜன் : மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விவசாயப் பயிர்களுக்குத் தெளிக்கும் பூச்சி மருந்துகளுக்காக மத்திய அரசு நம் மாநில அரசுக்கு ஏதேனும் உதவித்தொகை அளிக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) பூச்சி மருந்துகள் அவற்றின் விலையில் 65 சதவிகிதப்படி உழவர்களுக்கு விற்கப்படுகின்றன. எஞ்சிய 35 சதவிகித விலையில் பாதியை மத்திய அரசும், பாதியை மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து அளிக்கின்றன.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 65 சதவீதம் மத்திய அரசு மானியம் தருவதாகக் கூறினார்கள். . . .

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பூச்சி மருந்துகள் விலையில் 65 சதவிகிதம் உழவர்களுக்கு விற்கப்படுகின்றன. எஞ்சிய 35 சதவிகித விலையில் பாதியை மத்திய அரசும் பாதியை மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன.

மதுராந்தகம் நகருக்குப் புதைச் சாக்கடை

***475**—வினா : திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

மதுராந்தகம் நகரத்திற்குப் பாதாளச் சாக்கடை தேவையென்ற கோரிக்கையின் மீது சர்க்கார் நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மார்ச் 1967-ல் மதுராந்தகத்துக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் தேவையென்ற கோரிக்கை அந்தப் பஞ்சாயத்திடமிருந்து வந்தது. அரசின் தற்போதைய நிதிப் பற்றுக்குறையினால் இத்திட்டத்தை அரசினால் எடுத்துக்கொள்ள இயலாது என்று அறிவிக்கப்பட்டது.

திரு. கொளத் நூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, பாதாள சாக்கடை அமைக்கவேண்டுமானால் அதற்கு வேண்டிய நிலைமைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பஞ்சாயத்தின் எல்லைக்குட்பட்ட இடங்களில் பஞ்சாயத்துக்களே பாதாள சாக்கடை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். எனவே, மதுராந்தகம் பஞ்சாயத்தாக இருக்கிற காரணத்தினால் அரசாங்கம் அதை ஏற்று நடத்துவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

படிப்பு உதவித் தொகைகள்

***476** வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களுக்கு வழங்கும் உபகாரச் சம்பளம் எந்த மாதத்தில் வழங்கப்படுகிறது ?

1969 மார்ச் 26]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தமிகழ அரசு, மற்றும் மத்திய அரசு உதவித் தொகைகளில் முதல் தவணை டிசம்பர் மாத முடிவுக்குள் கொடுக்கப்படுகிறது. இரண்டாவது தவணை, அதாவது, சனவரி மாதம் முதல் எப்ரல் மாதம் முடிய கணக்கிடப்பட்ட தொகை, சனவரி மாதத்தில் கொடுக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, உபகாரச் சம்பளம் வழங்குவதற்குரிய பாரங்கள் எப்பொழுது அச்சிட்டு வெளியிடப் படுகின்றன ? அவற்றைக் காலதாமதமாக வழங்குவதால்தான் உபகாரச் சம்பளம் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது என்று பொதுவாகக் கருத்து இருக்கிறது. இதை விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்த பாரங்கள் கொடுக்கப்படுவதிலே காலதாமதம் ஏற்படுவதை ஓரளவுக்குத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்கின்றோம். அவைகள் அச்சடிக்கப்படுகின்ற அரசாங்க அச்சகத்தில் நிறைய வேலைகள் இருக்கின்ற காரணத்தால் இவைகளெல்லாம் தாமதப்படுகின்றன. அதற்காக இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர்களே, அந்த அந்த மாவட்டத்திற்குத் தேவையான பாரங்களை—வெறும் பாரங்களாக இருக்கின்ற காரணத்தினால்—அச்சிட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பல பேர்கள் இந்த பாரங்களை விலைக்கு விற்பதாகப் புகார்கள் கூறப்படுகின்றன. அதனால் கூட பாரங்கள் தேவையானபோது கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. ஆதலால் தேவையானவர்களுக்கு, குறிப்பிட்ட காலத்தில் சேர்க்கப்படவில்லை. இவைகளையெல்லாம் தவிர்க்க அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னால் மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் வழங்கும் தொகை போதவில்லையென்று இரண்டாவது இன்ஸ்டால்மெண்ட் கேட்கப்பட்டதே, அந்தத் தொகை வழங்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இரண்டாவது இன்ஸ்டால்மெண்ட் மானியமாக 26 இலட்சம் கேட்கப்பட்டு வந்தது. பரிசீலனைக்குப் பிறகு நமது நிதித்துறை அதை ஏற்றுக்கொண்டு 24 இலட்சத்து சொச்சத்திற்கு இன்றைக்கு அனுமதி அளித்துள்ளது.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, ஆதித் திராவிட மக்கள் பின்தங்கிய மக்கள் என்ற வகுப்பு அடிப்படையில் ஸ்காலர்ஷிப் கொடுப்பதால் ஒவ்வொரு வகுப்பினரும் தங்கள் வகுப்பைப் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று அரசிடம் கூறுகிறார்கள். எனவே, அதை வருமான அடிப்படையில், வருமானக்குறைவுள்ள வகுப்பார், யாராக இருந்தாலும், அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கின்ற வகையில், மத்திய அரசாங்கத்திடம் பரிந்துரைக்க நமது அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் உபகாரச் சம்பளம் வருமான எல்லையின் அடிப்படையிலே தான் தரப்பட்டு வருகிறது. அந்த வருமான எல்லையில் சாதி வேறுபாடுகள், சமய வேறுபாடுகள் எதுவுமே கிடையா. அதிலே, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் மத்திய அரசாங்கம் தான் உபகாரச் சம்பளம் தருகிறது. மாநில அரசாங்கம் தருகிற உபகாரச் சம்பளம், மாணவர்கள் வாங்கிய மதிப்பெண்கள், பின் தங்கியவர்கள், மிகவும் பின் தங்கியவர்கள் என்றெல்லாம் பிரித்துப் பலவிதமாகக் கொடுத்துக்கொண்டு வரப்படுகிறது.